
2019
ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය
தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
National Institute of Language Education and Training

# ஆண்டறிக்கை – 2019

# தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

**ஆண்டறிக்கை – 2019**

**உள்ளடக்கம்**


| தொ.இல | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01. | நிறுவனத்தின் அமைவிடம் | 59 |
| 1.1 | கொழும்பு பிரதான காரியாலயம் | |
| 1.2 | அகலவத்தை பயிற்சி நிலையம் | |
| 02. | நிறுவனத்தின் நோக்கம் | 60 |
| 03. | நிறுவனத்தின் கடமைகள் | 61 |
| 04. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 ஆம் வருடத்துக்கான முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் | 62 |
| 05. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் விபரம் | 63 |
| 06. | 2019 ஆம் அண்டுக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திக் கல்விச் சபையின் உறுப்பினர்கள் | 63 |
| 07. | நிறுவனத்தின் ஊழியர் குழாம் - 2019 | 66 |
| 7.1 | ஊழியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளுதல் | |
| 7.2 | நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் குழாம் | |
| 7.3 | நிறுவனத்தின் கட்டமைப்பு | |
| 7.4 | நிர்வாகப் பிரிவு | |
| 7.5 | திட்டமிடல் பிரிவு | |
| 7.6 | பயிற்சிப் பிரிவு | |
| 7.7 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 7.8 | கணக்குப் பிரிவு | |
| 08. | கணக்காய்வாளர் அறிக்கை | 92 |

## 01. நிறுவனத்தின் அமைவிடம்

### 1.1. கொழும்பு பிரதான காரியாலயம்

2019 ஆம் ஆண்டு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாகச் செயற்பாடுகள் 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புர, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் இடம்பெற்றது. பரந்துபட்டதாக, நாடு பூராகவும் மொழி கற்பித்தல் தொடர்பான பல்வேறு பாடநெறிகளைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்தல், நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளல், நிர்வாக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் ஆகிய நோக்கங்களுடன் கொழும்பு பிரதான காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

### 1.2 அகலவத்தை பயிற்சி நிலையம்



தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கொழும்பிலிருந்து சுமார் 100 கி. மீ. தூரத்தில் களுத்துறை மாவட்டத்தில் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்குரிய சுமார் 2.5 ஏக்கர் பரப்புடைய காணி அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இற்றை வரை பயிற்சிப் பாடநெறிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஏற்ற ஓர் இடமாகவும் சூழலாகவும் இது பிரசித்தி பெற்றுள்ளது. மொழிக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மிகவும் இனிமையான முறையிலும், செயற்பாட்டு ரீதியிலும் மேற்கொள்வதற்கு ஏற்ற மனோரம்யமான சூழலையும் மனதைக் கவரக்கூடிய அமைப்பினையும் கொண்டமைந்த அகலவத்தை பயிற்சி நிலையம் வதிவிட வசதிகளையும் கொண்டமைந்துள்ளது.

## 02.நிறுவனத்தின் நோக்கம்





- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்புச் சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களையும் உரை பெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர், உரை பெயர்ப்பாளர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குதல்
- மொழி பெயர்ப்பாளர்கள், உரை பெயர்ப்பாளர்களைப் பயிற்றுவிக்ககூடிய பொருத்தமான ஆசிரியர்களை உருவாக்குதல்
- பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.

03.**நிறுவனத்தின் கடமைகள**


.

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதன் பொருட்டு சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பாகவும் நீண்ட காலப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்காக ஆய்வு மற்றும் கற்றல் பெறுபேற்றினைப் பயன்படுத்துதலை நோக்காகக் கொண்டு மொழியினைப் பயிற்றுவிப்பதுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கற்றல் செயற்பாடுகளை நடாத்துதல்.
- தகைமையுடையவர்களுக்கு மொழிப் பயிற்சி மற்றும் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலும் அப்பயிற்சி மற்றும் கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக பூரணப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதலும்.
- மொழி கற்பித்தல் செயற்பாட்டின் பொருட்டு பயிற்சி பெயற்றவர்கள் உள்ளடங்கிய ஒரு சபையினை நிறுவுதல்.
- மொழியுடன் தொடர்புடைய தகவல்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான நிலையம் ஒன்றை நிறுவுதல்.
- மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு, மற்றும் சுருக்கெழுத்தாளர் ஆகிய விசேட குழுவினர்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் விசேட மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.

04. **தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 ஆம் வருடத்துக்கான பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவ சபை தொடர்பான தகவல்கள்**

நிறுவனத்தின் குறிக்கோள்களை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்ளும் பொருட்டான சகல தீர்மானங்களும் முகாமைத்துவ சபையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 3(1) ஆவது ஏற்பாட்டிற்கு அமைய கௌரவ அமைச்சர் அவர்களினால் கீழ் குறிப்பிடப்படும் முகாமைத்துவச் சபை நியமிக்கப்பட்டது.

| | பெயர் | பதவியும் அலுவலக முகவரியும் | நியமனத் திகதி | நியமனம் முடிவடையும் திகதி |
|---|---|---|---|---|
| 01 | திரு டீ.எம்.கே.பீ.தென்னகோன் | தலைவர், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய | 2018.04.25 | 2019.11.01 |
| 02 | திரு.பிரசாத் ஆர் ஹேரத் | பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய | 2008.08.02 | |
| 03 | திருமதி சஞ்ஜீவனி வீரசேகர | பணிப்பாளர், அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு, கொழும்பு 07 | 2018.09.20 | 2019.06.28 |
| 04 | திருமதி சரித்தா இலங்ககோன் | பணிப்பாளர், நிறுவனப் பிரிவு, அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு, கொழும்பு 07 | 2019.07.29 | 2020.01.22 |
| 05 | திரு. ஆர். கருணாசிரி | பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மனித முகாமைப் பிரிவு, இரண்டாம் மாடி, கல்வி அமைச்சு, பத்தரமுல்ல | 2018.08.23 | 2019.10.10 |
| 06 | திருமதி.பீ.என்.ராஜபக்ஷ | பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மனித முகாமைப் பிரிவு, இரண்டாம் மாடி, கல்வி அமைச்சு, பத்தரமுல்ல | 2010.10.10 | 2020.11.22 |
| 07 | கலாநிதி எஸ். ஸ்ரீதரன் | சுகாதார அமைச்சு | 2017.07.25 | 2020.11.22 |
| 08 | டப்.ஏ.டீ.சந்திரிக்கா ரூபசிங்ஹ | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி), நல்லிணக்கம், கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் மைச்சு | 2017.12.15 | 2019.10.10 |
| 09 | திருமதி.எஸ்.தெய்வேந்திரன் | மேலதிகச் செயலாளர் (மொழி), சமூக ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக | 2019.10.10 | 2020.11.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேம்பாடு மற்றும் இந்து விவகார அமைச்சு | | |
| 10 | திரு. பீ. ஹேமசந்திர | ஒழுங்கமைப்பாளர், 21 ஆம் மாடி, பிரதான அலுவலகம், இலங்கை வங்கி, கொழும்பு 01 | 2018.04.26 | 2020.11.22 |
| 11 | திருமதி.கே. நகுலராஜா | இராமநாதன் இந்துக் கல்லூரி, லோரன்ஸ் வீதி, கொழும்பு 04 | 2018.05.24 | 20201.11.22 |
| 12 | திருமதி.எஸ்.ஜீ.எம்.ஏ.பீ. சேனாரத்ன | கணக்காளர், அரச நிதித் திணைக்களம், திறைசேரி | 2018.06.21 | 2020.11.22 |
| 13 | பேராசிரியர்.எஸ்.ஜே.யோகராசா | மொழியியல் பிரிவு, களனி பல்கலைக்கழகம் | 2018.12.31 | 2021.11.22 |

05. **தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2019 ஆம் வருடத்துக்கான ஆலோசனைக்குழு பற்றிய விபரங்கள்**

| **பெயர்** | **பதவியும் காரியாலய முகவரியும்** | **நியமனத் திகதி** |
|---|---|---|
| திரு டீ.எம்.கே.பீ.தென்னகோன | தலைவர், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய | |
| திரு.பிரசாத் ஆர் ஹேரத் | பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய | |
| பேராசிரியர் அசோக்க பிரேமரத்ன | மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம் | 2015.12.18 |
| பேராசிரியர் கருணாநிதி | கல்வித்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம் | 2015.12.18 |
| திருமதி. கரீமா ஜயவீர | ஆங்கிலத் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம் | 2015.12.18 |
| பேராசிரியர்.டப்.எம். விஜேரத்ன | மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம் | 2015.12.18 |
| பேராசிரியர் அமரகீர்த்தி லியனகே | சிங்கள மொழித்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம் | 2015.12.18 |

***06. 2019 ஆம் வருடத்துக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்விச் சபை உறுப்பினர்கள்***

2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 07 ஆம் இலக்க ஏற்பாட்டின் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களின் மூலம் நிறுவனத்தின்

கல்வி நடவடிக்கைகளிலே திட்டமிடல், கொள்கைகள், மற்றும் பரிந்துரைகள் என்பவற்றுக்கான நிபந்தனைகள், மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பவற்றை முறையாகவும் வினைத்திறன் கொண்டதாகவும் செயற்படுத்துவதற்கு பல்வேறு பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மொழி, மொழியியல் மற்றும் கல்வித்துறைகளைச் சேர்ந்த கீழ்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நியமிக்கப்படுவர். இவர்கள் நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளிலே பிரதிநிதித்துவப்படும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது நேரடியாக அதில் செயற்படுவர்.

| | |
|---|---|
| திரு டீ.எம்.கே.பீ.தென்னகோன் | தலைவர், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய. |
| திரு.பிரசாத் ஆர் ஹேரத் | பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 321/1, மாக்கும்புர பன்னிபிட்டிய |
| வண.அகலகட சிரிசுமண | தலைவர், சிங்கள மொழித்துறை, கொழும்பு பல்கலைக்கழகம். |
| பேரா.ரத்னசிறி அரங்கல | சிங்களத் துறை, ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், நுகேகொடை. |
| பேரா.துஷ்யந்தி மென்டிஸ் | தலைவர், ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| பேரா. ரமீஸ் அப்துல்லா | தென்கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு. |
| திரு. கே.எஸ்ஆர். பெரேரா | ஆணையாளர், அரச கரும மொழிகள் திணைக்களம், 341/1, கோட்டை வீதி, இராஜகிரிய. |
| கலாநிதி.ஆர்.ஈ.ஜீ. பொன்சேக்கா | துறைத் தலைவர், ஆங்கில மொழிகள் துறை, றுகுணு பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் வீ.மகேஸ்வரன் | தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். |

### *6.1 கல்விச் சபையின் பொறுப்புகள்*

- சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனத்தின் கல்வி சார் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைய பரீட்சைகளை நடாத்துதலும் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்படக்கூடிய ஏனைய நிபந்தனைகளைத் திருப்திகரமான முறையில் அடைந்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் பத்திரம் வழங்குதலும் மற்றும் நிறுவனத்தின் ஏனைய கலை தொடர்பான விருதுகளை

வழங்குவதற்குத் தகைமையுடைய நபர்கள் தொடர்பாக முகாமைத்துவச் சபைக்கு சிபாரிசினை முன்வைத்தலும்.

- நிறுவனத்திற்கு சபையினால் ஆற்றுப்படுத்தப்பட்ட எந்தவொரு விடயம் தொடர்பான அறிக்கை தொடர்பாகவும் கவனமெடுத்தல்.
- நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற கல்விசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பாடநெறிகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தயாரித்து முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பித்தல்.
- நிறுவனத்தின் கல்வி சார் சபையினை நியமித்தல், பதவி நீக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தான சட்டங்கள், ஆட்சேர்ப்புத் திட்டம், சம்பளம், விசேட கொடுப்பனவு மற்றும் கட்டணம், சேவைக்காலம், விடுமுறை, ஆகியன தொடர்பாக முகாமைத்துவச் சபைக்கு சிபாரிசினை முன்வைத்தல்.
- புலமைப்பரிசில்கள், உதவிப் பணம், பதக்கம் மற்றும் பரிசில்களைப் பெறுவதற்காக பூரணப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் தொடர்பான சிபாரிசினை முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பித்தல்.
- புலமைப்பரிசில்கள், உதவிப் பணம், பதக்கம் மற்றும் பரிசில்கள் தொடர்பாக முகாமைத்துவச் சபையினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்கள் தொடர்பாக சிபாரிசினை முன்வைத்தல்.
- முகாமைத்துவச் சபையின் அனுமதியுடன் உப கல்விசார் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சபையினை நியமனம் செய்தல்.
- முகாமைத்துவ சபையினது கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டியதுமான ஒழுங்கு விதிகள் தொடர்பாக பரிந்துரைகளைத் முன்வைத்தல்

07. **நிறுவனத்தின் பதவியணி - 2019**

நிறுவனப் பதவியணியில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாவார். முகாமைத்துவச் சபையின் ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர் நாயகத்தினால் நிறுவனத்தின் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன:

1. நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு
2. நிறுவனத்தின் சகல பதவியணியினரையும் நியமித்தலும் நிர்வாகம் மற்றும் நிறுவன நடிவடிக்கைகளும்
3. நிறுவனத்தினால் நடாத்தப்படும் சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒன்றிணைத்தலும் மேற்பார்வை செய்தலும்

**7.1. பதவியணிக்கு ஆட்சேர்த்தல்**

இவ்வருடத்தில் நிறுவனத்தின் அலுவலர் குழாத்தின் வெற்றிடமாக இருந்த பதவிகளின் பொருட்டு, சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசினைப் பெற்றுக் கொண்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து நிறுவனத்தின் பதவி எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புத் திட்டத்தை அனுமதித்துக்கொள்ள முடிந்தமையினூடாக நிறுவனத்திற்கு கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் பதவி 02, உதவி இணைப்பாளர்கள் பதவி 01, காரியாலய உதவியாளர் பதவி 01 என்பனவற்றுக்கு தகைமையுடையவர்களை உரிய முறையில் ஆட்சேர்ப்புச் செய்து கொள்ள முடியுமாக இருந்தது.

**7.2 நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாம்**

| **பதவிப் பெயர்** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2. பணிப்பாளர் | 02 |
| 3. உதவிப் பணிப்பாளர் | 03 |
| 4. கணக்காளர் | 01 |
| 5. கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 05 |
| 6. நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 7. உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| 8. உதவி இணைப்பாளர்கள் | 08 |
| 9. நூலகர் | 01 |
| 10. முகாமைத்துவ உதவியாளர் | 08 |
| 11. மின்சாரம் மற்றும் விசைக் குழாய் இயக்குநர் | 01 |
| 12. சாரதி | 05 |
| 13. காரியாலய உதவியாளர் | 04 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | 41 |

மேற்படி பதவி எண்ணிக்கை அனுமதிக்கப்பட்டதன் பின்னர், நிறுவனத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

| **பதவி** | **வெற்றிடம்** |
|---|---|
| 1. கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 02 |
| 2. உதவி இணைப்பாளர் | 01 |
| 3. காரியாலய உதவியாளர் | 01 |

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு ஏற்ப கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர், உதவி இணைப்பாளர், காரியாலய உதவியாளர் ஆகியோர் முறையாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிறுவனத்தின் பதவியணி பின்வருமாறு




| **பதவிப் பெயர்** | **எண்ணிக்கை** |
|---|---|
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2. பணிப்பாளர் | 01 |
| 3. உதவிப் பணிப்பாளர் | 02 |
| 4. கணக்காளர் | 01 |
| 5. கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் | 03 |
| 6. நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 7. உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| 8. உதவி இணைப்பாளர்கள் | 08 |
| 9. முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| 10. சாரதி | 05 |
| 11. காரியாலய உதவியாளர் | 04 |
| மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | 33 |

7.3 நிறுவனத்தின் சேவைகளை இலகுவான முறையில் இட்டுச் செல்வதற்காக நிறுவனமானது பின்வரும் அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. நிர்வாகம் மற்றும் வழங்கல்கள் பிரிவு
2. திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவு
3. பயிற்சிப் பிரிவு

4. உள்ளக கணக்காய்வுப் பிரிவு
5. கணக்குப் பிரிவு

### 7.4. நிர்வாகம் மற்றும் வழங்கல்கள் பிரிவு

நிறுவனத்தின் பதவியணியினருக்குரிய அனைத்து நிர்வாக மற்றும் நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது இப்பிரிவிலாகும். நிறுவனத்தின் எந்தவொரு பகுதியினதும் காரியாலய நடவடிக்கைகள் தங்குதடையின்றி இயங்கும் வகையில் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஒவ்வொரு பிரிவுக்குமிடையே தொடர்புகளை மிகவும் சிறந்த முறையில் இப்பிரிவு பேணுகின்றது.

அத்துடன் இப்பிரிவு ஏனைய சகல பிரிவுகளுக்கும் தேவையாக அலுவலர் குழாத்தினை குறித்த செயற்பாட்டுத் திட்டத்தினூடாக இணைத்துக் கொள்வதோடு அவர்களின் நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி, ஊழியர் நலன்புரி மற்றும் வசதிகளை வழங்கி, அவ்வப்பிரிவுகளின் செயற்பாடுகளானது ஆக்கத்திறன் மிக்க வகையில் வினைத்திறன் உடையதாக அமையும் பொருட்டு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் நிறுவனத்தின் சகல பிரிவுகளுக்கும் தேவையான கணினி இயந்திரங்கள், அலுவலகத்திற்கு அன்றாடம் தேவைப்படுகின்ற காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளை வழங்குதல், பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்தப்படுத்தல் சேவையினை வழங்குதல் உட்பட சகல நடவடிக்கைகளும் இப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறே நிறுவனத்தின் நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதியும் இப் பிரிவினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது.




**நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் பகுதி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இதுவரை காலமும் பயணம் செய்த வெற்றிப் பாதையில் பங்களிப்பு செய்த மற்றுமொரு பிரிவாக, நிறுவனத்தில் பாடநெறிகளை நடாத்திச் செல்லும் வளவாளர்களுக்கு, நிறுவனத்தின் பாடநெறிகளில் பங்குபற்றுபவர்களுக்கு மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக உதவி வழங்கும் நிறுவனத்தின் அலுவலர் குழாத்திற்கு அறிவு மற்றும் தகவல்களைச் சேகரித்துக் கொள்ளும் பொருட்டு வாசிக்கும் வசதியினை நூலகம் பெற்றுக் கொடுக்கின்றது.

மொழி தொடர்பான கற்றலுக்கு விசேட உதவிகளை நல்கக்கூடிய நூல்களால் பூரணமடைந்துள்ள இந்நூலகத்தில் நிர்வாக முகாமைத்துவம், கணக்கீடு, தகவல் தொழிநுட்பம், இலக்கியம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடப் பரப்புகளுடன் தொடர்புடைய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் காணப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக இந்நூலகம் தேசிய மொழியைக் கற்பிக்கும் செயற்பாட்டின் போது அத்தியாவசியமான புத்தகங்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் மற்றும் பாவனையில் உள்ள சொற்பதங்கள், மொழியியல் விமர்சனங்கள் அதேபோன்று மொழிப் பயிற்சி வழங்குதல் மற்றும் மொழிப் பயிற்சி வழங்குவதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும், செவிப்புல உபகரணங்களையும் உள்ளடக்கி காணப்படுகின்றது.

இவை தவிர  இரண்டாம் மொழிக் கற்றலின்போது தேவைப்படுகின்ற நூல்கள், விமர்சன நூல்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல், சுயசரிதை நூல்களை வழங்குதல் என்பன இந்நூலகத்தினால் நிறைவேற்றப்படும் மற்றுமொரு சேவையாகும். இதற்கு மேலதிகமாக மொழி தொடர்பான விடயங்கள் குறித்தான தகவல்கள் மற்றும் ஆவணப்படுத்தல் நிலையமாக விளங்குவதுடன், பல்வேறு மொழிகள் தொடர்பாக தேசிய மட்டத்திலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வு தொடர்பான ஆவணப்படுத்தல்களுக்கான நிலையமாகவும் நூலகம் காணப்படுகின்றது.



7.5 **திட்டமிடல் பிரிவு**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் மற்றும் குறிக்கோளினை நிறைவேற்றும் பொருட்டுத் தேவையான திட்டமிடல்களை மேற்கொள்ளுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளபப்டும் பிரதான செயற்பாடாகும்.

பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்ளுதல், இதனடிப்படையில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் மாதாந்தம் நிறைவேற்றப்படவேண்டிய செயற்பாடுகளைத் திட்டமிடல் என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். அத்துடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கை, காலாண்டு முன்னேற்ற அறிக்கை மற்றும் நிறுவனத்தின் வருடாந்த அடைவு அறிக்கையினைத் தயாரித்து குறித்த பிரிவிற்குச் சமர்ப்பித்தல் என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக அவ்வப்போது ஒப்படைக்கப்படும் விசேட பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கு செய்தல், நடைமுறைப்படுத்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**வருடாந்த முன்னேற்ற அறிக்கை - 2019**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மும்மொழிக் கொள்ளையை மேம்படுத்தும் வகையில் தேசிய மொழிகள், சமூக மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாக 2007 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் ஆரம்பமாக அதாவது, 2007 நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இந்நிறுவனம் அரசியலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கி வந்ததோடு இந்நிறுவனம் அந்த அமைச்சு இயங்கி வந்த 310, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் இயங்கி வந்தது. 2010 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் அமைச்சு தெசிய மொழிகள் மற்றும் சமூக மேம்பாடு எனப் பெயர் மாற்றம் பெற்றதோடு இந்நிறுவனமும் அவ்வமைச்சின கீழ் செயற்படும் ஒரு நிறுவனமாக இயங்கி வந்தது.

2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் நிறுவனத்தின் பிரதான காரியாலயம் இலக்கம் 155/1, காசல் வீதி, கொழும்பு 08 என்னும் முகவரியில் இயங்கி வந்தததோடு, 2013 ஆம் அண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் 2015 பெப்ரவரி 28ஆம் திகதி வரை இரண்டாம் மாடி, கட்டிட இலக்கம் 09, பண்டாராநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மநாட்டு மண்டபம், கொழும்பு 07 என்னும் முகவரியிலும் 2017 மே மாதம் 30 ஆம் திகதி முதல் 40, புத்தகமுவ வீதி, இராஜகிரிய என்னும் முகவரியிலும் இயங்கி வந்த அதேவேளை, தற்போது 321/1, ஹைலெவல் வீதி, மாக்கும்புரை, பன்னிபிட்டிய என்னும் முகவரியில் இங்கி வருகின்றது.

தற்போது நிறுவனம் தனது இலக்குகளை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு நாடு பூராகவும் பாடநெறிகளை நடாத்தி வருகின்றது. அவற்றுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் முக்கியம் பெறுகின்றன.

- சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறிகளுக்கான பாடத் திட்டங்களைத் தயார்படுத்துதல்
- சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி கற்பித்தலுக்குரிய வளவாளர்களைப் பயிற்றுவித்தல்
- இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் பட்டப் பாடநெறி மற்றும் இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்
- வளவாளர்கள் தொடர்பான பின்னூட்டல் மற்றும் கண்காணிப்பு வேலைத ˙திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்
- மொழிபெயர்ப்பு தொடர்பான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல்
- அரச ஊழியர்களுக்கான பகுதி நேர இரண்டாம் மொழிப் பயிற்சிப் படநெறிகளை (மட்டம், ,ை மட்டம் 2, மட்டம் 3, மட்டம் 4 ) நடைமுறைப்படுத்தப்படுத்தல்
- அரச ஊழியர்கள் மற்றும் க.பொ.த உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு வதிவிட மற்றும் வதிவிடமற்ற மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துதல்
- புதிதாக நியமனம் பெறுகின்ற அரச ஊழியர்களுக்கு குறுகிய காலப் பகுதிக்குள் இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல் (வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றம் ஏனைய ஊழியர்கள்)
- வானொலி அலை வரிசைகளினூடாக மொழிப் பயிற்சிப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்தல்
- க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல்

நிறுவனத்தினால ஒழுங்குசெய்யப்படும் வதிவிடப் பாடநெறிகள் கலேவத்தை, அகலவத்தை என்னும் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள எமது பயிற்சி நிலையத்திலே இடம்பெறும். ரம்மியமான ஒரு சூழலிலே அமையப் பெற்றுள்ள எமது இந்தப் பயிற்சி நிலையத்தில் 250 பங்குபற்றுநர்கள் ஒரே முறையில் பங்குபெறக்கூடிய விரிவுரை மண்டபமும், 30 பேர் பங்குபெறக்கூடிய மொழி ஆய்வு கூடமும், 60 பேருக்கு தங்குமிட வசதிகளும் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு வளவாளர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுவதோடு, நிறுவனத்தின் பணிக் குழாத்தினரும் இதன்பால் அர்ப்பணிப்படன் செயற்படுவர்.

**இலக்குக் கூற்று**

தேசிய மொழிப் பயிற்சியின் மூலம் இலங்கையர் மத்தியில் சமாதானத்தையும் சகவாழ்வையுயம் ஏற்படுத்துதல்

**பணிக்கூற்று**

அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மொழிக் கல்வி மற்றும் பயிற்சியின் பொருட்டு மும்மொழி சார் அறிவினை வழங்கும் ஒரு மத்திய நிலையமாகச் செயற்படுதல்

**நோக்கங்கள்**

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு ஆர்வம் உடையவர்களுக்கு அம்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை உருவாக்குதல்.
- சட்ட எழுத்துருவிலான தேசிய மொழி பெயர்ப்புச் சேவை மற்றும் தேசிய உரை பெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக்கூடிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களையும் உரை பெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்.
- சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர், உரை பெயர்ப்பாளர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்கக்கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குதல்
- பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மும்மொழித் தேர்ச்சி உடையவர்களைப் பயிற்றுவித்தல்.

**திட்டமிடல் அமர்வுகள்**

2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகள் மற்றும் அத்தகைய பயிற்சி நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பேராசிரியர்கள், கலாநிதிகள் மற்றும் அத்துறை சார்ந்த விசேட நிபுணர்களுடன் பாடத்திட்ட விருத்தி செயற்பாடுகள் இடம்பெற்றன.

2019 ஆம் ஆண்டு இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் 14 இடம்பெற்ற அதேவேளை, இதற்காக ரூபா 553,000.00 செலவானது.

## 7.6. பயிற்சிப் பிரிவு

### ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள்

நிறுவனத்தினால் நாடு பூராகவும் ஏற்பாடு செய்யப்படும் மொழிப் பயிற்சிப் பாடநெறிகளிலே கற்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள் மேற்படி 05 நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்விலே பங்குகொண்டு அதிலே சித்திபெறும் ஆசிரியர்கள் மட்டுமே. இத்தகைய ஆசிரியர்கள் இதயபூர்வமாகப் பங்குபற்றுவதோடு "யசவஉைனியவழசல சுநகடநஉவளைந ர்நயசவ ர்ழடனநைபெ வுநயஉாநைபெ "சழஉநளள என்னும் முறையினைப் பயன்படுத்தி கற்றல் நடவடிக்கைகளிலே ஈடுபடுவர். தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அரச ஊழியர்களுக்கு இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களை உருவாக்குதலே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இத்தகைய பாடநெறிகளின் பொருட்டு பங்குபற்றுநர்களிடமிருந்து பாடக் கட்டணம் அறவிடப்படும் அதேவேளை, 2019 ஆம் ஆண்டு இத்தகைய பயிற்சிப் பட்டறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை. இதன்போது 200 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**2019 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட 150 மணித்தியால ஆசிரியர்களது வதிவிடப் பயிற்சி பெறும் பயிற்சிப் பட்டறை**

| | இடம் | பயிற்சிப் பட்டறை எண்ணிக்கை | பங்குபற்றியோர் | வருமானம் | செலவு |
|---|---|---|---|---|---|
| 01 | அகலவத்தை பயிற்சி நிலையம் | 1 | 200 | 750,000.00 | 517,935.00 |
| | முழு எண்ணிக்கை | 1 | 200 | 750,000.00 | 517,935.00 |

**ஆசிரியர்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்**

இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவு மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்குடன் இரண்டு நாட்கள் கொண்ட வேலைத் திட்டமாக இவ் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வேலைத் திட்டங்கள் 12 செயற்படுத்தப்பட்டதுடன் இதற்காக ரூபா 12,863,000.00 செலவிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 1162 வளவாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

**<u>அரச ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட 06 நாட்கள் கொண்ட 50 மணித்தியால வதிவிடமற்ற சிங்கள, தமிழ் பயிற்சிப் பாடநெறிகள்</u>**

அரச நிர்வாக அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட 1/2014 (4) என்னும் சுற்றுநிருபத்தின் மூலம் 50 வயதைப் பூர்த்திசெய்த அனைத்து அரச ஊழியர்களும், கனி'ட சேவைப் பிரிவைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் 50 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியினைப் பின்பற்றுவதன் மூலம் மொழித் தேர்ச்சிப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். அதேபோல கனி'டதர உத்தியோகத்தர்கள் இந்த நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் 50 மணித்தியாலப் பாடநெறியினைத் தொடர்வதன் மூலம் மேற்படி பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு காலத்தில் 79 பயிற்சிப் பாடநெறிகள் திறைசேரி நிதியத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



**2019 ஆம் ஆண்டு திறைசேரி நிதியத்தின் மூலம் நடாத்தப்பட்ட (06 நாட்கள்) (50 மணித்தியால) மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

**(மாவட்ட அடிப்படையில்)**

| தொ. இல | மாவட்டம் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பாடநெறியில் பங்குபற்றியோர் எண்ணிக்கை | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 7 | 1151 | 378,635.00 |
| 2 | கம்பஹா | 3 | 449 | 195,690.00 |
| 3 | களுத்துறை | 6 | 1453 | 463,462.40 |
| 4 | அம்பாந்தோட்டை | 3 | 284 | 154,980.00 |
| 5 | மன்னார் | 3 | 174 | 164,695.00 |
| 6 | மட்டக்களப்பு | 4 | 432 | 255,385.00 |
| 7 | திருகோணமலை | 2 | 200 | 83,790,00 |
| 8 | அம்பாறை | 4 | 425 | 203,590.00 |
| 9 | கண்டி | 7 | 891 | 346,338.00 |
| 10 | மாத்தளை | 4 | 374 | 216,110.00 |
| 11 | நுவரெலியா | 1 | 267 | 45,880.00 |
| 12 | அநுராதபுரம் | 3 | 337 | 175,800.00 |
| 13 | பொலன்னறுவை | 1 | 69 | 43,085.00 |
| 14 | குருநாகல் | 8 | 622 | 413,130.00 |
| 15 | புத்தளம் | 1 | 90 | 60,755.00 |
| 16 | பதுளை | 8 | 833 | 494,855.00 |
| 17 | மொனராகலை | 4 | 566 | 219,795.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | இரத்தினபுரி | 4 | 451 | 231,479.00 |
| 19 | கேகாலை | 6 | 446 | 242,138.00 |
| **மொத்த எண்ணிக்கை** | | **83** | **9,514** | **4,389,592.40** |

**2019 ஆம் ஆண்டு கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்ட (06 நாட்கள்) கொண்ட (50 மணித்தியால) பாடநெறிகள்**

| **தொ.இ** | **மாவட்டம்** | **பாடநெறிகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை** | **வருமானம் (ரூபா)** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|---|---|
| **1** | கடற்படைப் பிரதான காரியாலயம் | 2 | 155 | 320,000.00 | 114,024.00 |
| **2** | பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்;ராட்சி சபைகள் அமைச்சு | 1 | 52 | 156,000.00 | 23,535,00 |
| **3** | கல்வி வெளியீட்டுத் தணைக்களம் | 1 | 34 | 102,000.00 | 25,140.00 |
| **4** | தொழிற்த் திணைக்களம் | 1 | 28 | 112,000.00 | 48,000.00 |
| **5** | தமன்கடுவ பிரதேச செயலகம் | 1 | 102 | 204,000.00 | 84,070.00 |
| முழு **எண்ணிக்கை** | | **6** | **371** | **894,000.00** | **294,769.00** |

**12 நாட்கள் கொண்ட (100 மணித்தியால) சிங்கள / தமிழ் / ஆங்கில பயிற்சிப் பாடநெறிகள்**

கலாசார மற்றும் சமூக ஒன்றிணைப்பினை முன்னிட்டு மனிதாபிமானம் மற்றும் சகவாழ்வுடன் கூடிய அரச ஊழியர்களை உருவாக்கும் பொருட்டு நிறுவனம் முன்னெடுக்கும் ஒரு முயற்சியாக

இந்த 12 நாட்கள் கொண்ட குறுகிய கால வேலைத் திட்டம் அமைகின்றது. இந்தப் பாடநெறியில் பங்குகொள்ளும் ஊழியர்கள் 12 நாட்கள் பாடநெறியில் பங்குகொள்ள் வேண்டி இருப்பதோடு பாடநெறியின் இறுதியில் இடம்பெறுகின்ற வாய் மொழி மற்றும் எழுத்துப் பரீட்சைகளின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அவ்வாறே, அரச நிர்வாகச் சுற்றறிக்கை 1/2014/4 இன் அடிப்படையில் 50 வயதிற்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் இந்நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற 100 மணித்தியாலப் பாடநெறியில் பங்கு கொள்வதன் மூலம் மொழித் தேர்ச்சி பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் மூலம் 100 மணித்தியலாலப் பாடநெறிகள் 85 இடம்பெற்றன. அவற்றுள் 2 பாடநெறிகள் கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்டதோடு ஏனைய 83 பாடநெறிகள் திறைசேரியின் நிதியத்திலிருந்து நடாத்தப்பட்டன.

## 2019 ஆம் அண்டு திறைசேரி நிதியத்தின் மூலம் நடாத்தப்பட்ட 12 நாட்கள் கொண்ட 100 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்

## மாவட்ட அடிப்படையில்

| தொ.இ | மாவட்டம் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 2 | 254 | 159,063.00 |
| 2 | கம்பஹா | 4 | 363 | 315,726.00 |
| 3 | களுத்துறை | 3 | 185 | 219,474.00 |
| 4 | காலி | 5 | 426 | 457,586.00 |
| 5 | மாத்தறை | 2 | 252 | 244,073.00 |
| 6 | அம்பாந்தோட்டை | 3 | 278 | 258,862.00 |
| 7 | யாழ்ப்பாணம் | 5 | 362 | 451,069.43 |
| 8 | கிளிநொச்சி | 5 | 260 | 323,351.00 |
| 9 | முல்லைத்தீவு | 5 | 298 | 342,270.00 |
| 10 | மன்னார் | 1 | 39 | 53,894.00 |
| 11 | வவுனியா | 4 | 346 | 375,058.00 |
| 12 | மட்டக்களப்பு | 2 | 112 | 157,708.00 |
| 13 | திருகோணமலை | 1 | 47 | 39,534.00 |
| 14 | அம்பாறை | 3 | 332 | 351,207.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | கண்டி | 6 | 494 | 557,433.00 |
| 16 | மாத்தளை | 2 | 164 | 231,528.00 |
| 17 | நுவரெலியா | 1 | 115 | 111,074.00 |
| 18 | அநுராதபுரம் | 3 | 291 | 345,357.00 |
| 19 | குருணாகல் | 8 | 669 | 863,816.20 |
| 20 | புத்தளம் | 1 | 93 | 91,488.10 |
| 21 | பதுளை | 5 | 636 | 605,810.00 |
| 22 | மொணராகலை | 1 | 157 | 164,140.00 |
| 23 | இரத்தினபுரி | 7 | 385 | 423,616.00 |
| 24 | கேகாலை | 4 | 714 | 353,714.00 |
| **முழு எண்ணிக்கை** | | **83** | **7272** | **7,496,851.73** |

## 2019 ஆம் ஆண்டு கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்ட (12 நாட்கள்) கொண்ட (100 மணித்தியால) பாடநெறிகள்

| தொ.இ | மாவட்டம் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | மின்சார சபை மொனராகல் | 2 | 122 | 610,000.00 | 171,760.00 |
| 2 | மின்சார சபை காலி | 1 | 52 | 260,000.00 | 96,284.00 |
| **முழு எண்ணிக்கை** | | **3** | **174** | **870,000.00** | **268,044.00** |

**<u>வெவ்வேறு ஊழியர்களின் பொருட்டும் நடாத்தப்பட்ட 150 மணித்தியாலப் பாடநெறிகள்</u>**

வெவ்வேறு துறைகளிலும் சேவை புரிகின்ற அரச ஊழியர்களை இலக்காகக் கொண்டு இத்தகைய பாடநெறிகள் வதிவிடப் பாடநெறிகளாக, வதிவிடமற்ற பாடநெறிகளாக நடாத்தப்படுகின்றன. இவற்றுள் முக்கியமாக புதிதாக நியமனம் பெறுகின்ற வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சுங்க வரி ஊழியர்கள், மற்றும் தொழிநுட்ப ஊழியர்கள் என்போர் உள்ளடங்குகினறனர்.



- **திறைசேரி நிதியத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட 150 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

| **தொ.இ** | **மாவட்டம்** | **பாடநெறிகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை** | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|---|
| **1** | கண்டி | 2 | 177 | 248,441.36 |
| **முழு எண்ணிக்கை** | | **2** | **177** | **248,441.36** |

- **2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற வருமானம் ஈட்டப்பட்ட வதிவிடமல்லாத இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

| **தொடர் இல.** | **மாவட்டம்** | **பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை** | **வருமானம் (ரூ)** | **செலவு (ரூ)** |
|---|---|---|---|---|
| **1** | வடமேல் மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் | 60 | 600,000.00 | 159,974.00 |
| **2** | குருணாகல் பொது வைத்தியசாலை | 80 | 800,000.00 | 168,314.00 |
| **3** | குளியாப்பிட்டி மேற்கு | 68 | 680,000.00 | 149,229.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பொலனறுவை பொது வைத்தியசாலை | 62 | 620,000.00 | 187,214.00 |
| 5 | யட்டிநுவர பிரதேச செயலகம் | 90 | 900,000.00 | 123,934.36 |
| 6 | தியத்தலாவ நில அளவையியலாளர் காரியாலயம் | 87 | 870,000.00 | 124,507.00 |
| 7 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 34 | 250,000.00 | 117,084.00 |
| 8 | பண்டாரநாயக்க ஞாபகாரத்த ஆயுர்வேத ஆய்வு மையம் | 63 | 630,000.00 | 132,779.00 |
| 9 | சுதேச வைத்தியம் தொடர்பான தேசிய நிறுவகம் | 60 | 600,000.00 | 110,454.72 |
| 10 | ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை | 63 | 630,000.00 | 113,490.00 |
| 11 | த சொய்சா வைத்தியசாலை | 52 | 520,000.00 | 110,554.00 |
| 12 | காசல் வீதி, பெண்கள் வைத்தியசாலை | 50 | 500,000.00 | 107,134.00 |
| 13 | ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலை | 52 | 520,000.00 | 110,034.00 |
| **முழு எண்ணிக்கை** | | **821** | **8,120,000.00** | **1,714,702.08** |

- **2019 ஆம் அண்டு இடம்பெற்ற வருமானம் ஈட்டப்பட்ட வதிவிட இரண்டாம் மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

| தொடர் இல. | அமைவிடம் | பாடநெறி | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | வருமானம் (ரூ) | செலவு (ரூ) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகலவத்தை பயிற்சி நிலையம் | வைத்தியர்களுக்கான பாடநெறி | 10 | 699 | 17,475,000.00 | 7,725,775.00 | | | | | |
| 2 | அகலவத்தை பயிற்சி நிலையம் | அறிவியல்சார் ஊழியர்களுக்கான பாடநெறி | 1 | 43 | 1,075,000.00 | 630,341.00 | | | | | |
| 3 | அகலவத்தை | பொறியியலாளர்களு | 2 | 91 | 2,275,000.00 | 488,697.00 | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பயிற்சி நிலையம் | க்கான பாடநெறி | | | | | | | | | |
| **4** | அகலவத்தை பயிற்சி நிலையம் | அரச நில அளவையியலாளர்களுக்கான பாடநெறி | 2 | 114 | 2,850,000.00 | 1,233,135.00 | | | | | |
| | **முழு எண்ணிக்கை** | | **15** | **947** | **23,675,000.00** | **10,641,487.00** | | | | | |

## உயர்தர மாணவர்களுக்கான இரண்டாம் மொழிப் பாசறைகள்

க.பொ.த (உ. த) ப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இரண்டாம் மொழி கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்துவதே இதன் அடிப்படையான நோக்கமாகும். இரண்டு நாட்களைக் கொண்டதாக மாகாண அடிப்படையில் இத்தகைய மொழிப் பாசறைகள் இடம்பெறுவதோடு, இதன்பொருட்டு எமது நிறுவனத்தில் விசேட பயிற்சினைப் பெற்றுக் கொண்ட வளவாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.
2019ஆம் ஆண்டு இத்தகைய மொழிப் பாசறைகள் 03 இடம்பெற்றதோடு இதன் பொருட்டு ரூபா 495,030.00 செலவு செய்யப்பட்டது.

## 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தர மாணவர்களுக்கான மொழிப் பாசறை வேலைத்திட்டங்கள்

| தொடர் இல | அமைவிடம் | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | அல் - ஹர்சத் மகா வித்தியாலயம், அம்பாறை | 2 | 447 | 30,950.00 |
| 2 | செங்கலடி மகா வித்தியாலயம், சாய்ந்தமருது | 1 | 300 | 190,080.00 |
| முழு எண்ணிக்கை | | 3 | 747 | **495,030.00** |

**<u>“தெரிந்தால் கற்பியுங்கள் தெரியாவிட்டால் கற்றுக் கொள்ளுங்கள்” வானொலி நிகழ்ச்சி</u>**

க.பொ.த சாதாரண தரம் இரண்டாம் மொழியை இலக்காகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு முதல் நடாத்தப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டம் 2019 ஆம் ஆண்டும் நடாத்தப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள, தமிழ்ச் சேவைகள் உள்ளடங்கலாக பிரதேச சேவைகள் ஒன்பதினூடாக (09) வருடம் முழுவதுமாக நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியின் பொருட்டு இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் சிரே' ட விரிவுரையாளர் திருமதி. மல்லிகா நாராயணன் அவர்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியின் பொருட்டு விளம்பரச் செலவுகள் உள்ளடங்கலாக 2019 ஆம் ஆண்டு ரூபா. 153,239.00 செலவானது.

இதற்கு மேலதிகமாக மொழி கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் ரூபாவாஹினி அலைவரிசையின் மூலம் 'மொழி கேட்போம்' என்னும் வேலைத்திட்டம் 2019 ஆம் ஆண்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டதோடு இதன் பொருட்டு ரூபா 4,340,000.00 செலவிடப்பட்டது.

**" தெரிந்தால் கற்பியுங்கள் தெரியாவிட்டால் கற்றுக் கொள்ளுங்கள்" என்னும் வானொலி நிகழ்ச்சிக்கு நிகராக நடாத்தப்படும் க.பொ.த சாதாரண தர இரண்டாம் மொழிக் கருத்தரங்குகள்**

இந்நிறுவனமும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சும் இணைந்து 2019 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ஒரு நாள் விசேட கருத்தரங்கை நாடு பூராகவும் நடாத்தியது.

இக்கருத்தரங்கின் பொருட்டு ஆசிரியர்களுக்கான அறிவுரைப்பு வழிகாட்டிகளும், மாணவர்களுக்கான கையேடுகளும் நிறுவனத்தினால் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. இதன்பொருட்டு குறிப்பிட்ட துறையுடன் தொடர்புடைய விசேட நிபுணர்களின் உதவியும் நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, இந்நிகழ்வின் பொருட்டு ரூபா. 1,072,770.00 செலவானது.

கருத்தரங்குகளின் பொருட்டு நிறுவனத்திலே பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களுள் குறிப்பிட்ட ஒரு விசேட குழுவினர் தெரிவு செய்யப்பட்டதோடு, அவர்களுக்கு கல்விசார் ஊழியர்களினால் விசேட ஒரு பயிற்சியும் வழங்கப்பட்டது.

முழு இலங்கையையும் உள்ளடக்கும் வகையில் எமக்குக் கிடைக்கப்பெற்ற கேள்விகளைக் கருத்திற் கொண்டு பயிற்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதோடு, 5 கருத்தரங்குகள் என்னும் அடிப்படையில் அவை இடம்பெற்றன.

**2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த (சாதாரண தர) இரண்டாம் மொழிக் கருத்தரங்குகள்**

| தொடர் இல | அமைவிடம் | மாணவ மாணவிகளின் எண்ணிக்கை | செலவீனம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | மாவட்ட செயலகம், களுத்துறை | 1004 | 140,291.00 |
| 2 | விகாரமகாதேவி பெண்கள் பாடசாலை, கிரிபத்கொட | 265 | 66,563.00 |
| 3 | விவேகானந்தா வித்தியாலயம், கொழும்பு | 225 | 60,200.00 |
| 4 | ஆனந்தா மகா வித்தியாலயம், எல்பிட்டிய | 152 | 52,000.00 |
| 5 | மாத்தறை மாவட்ட செயலகம் | 702 | 101,400.00 |
| 6 | வீரகெட்டிய ராஜபக்கஸ வித்தியாலயம் | 750 | 103,395.00 |
| 7 | வயம்ப ராஜகீய வித்தியாலயம் | 423 | 71,500.00 |
| 8 | புத்தளம் ‘ாஹிரா வித்தியாலயம் | 362 | 61,354.00 |
| 9 | மெதிரிகிரிய தேசிய பாடசாலை மற்றும் முஸ்லீம் வித்தியாலயம் | 302 | 58,310.00 |
| 10 | அநுராதபுரம் நிவரிதன சேத்திய மற்றும் பலிசிங்ஹ ஹரிஸ்சந்திர வித்தியாலயம் | 352 | 67,155.00 |
| 11 | பாத்ததும்பர பிரதேச செயலகம் | 259 | 63,389.00 |
| 12 | பழரதேச செயலகம், மாத்தளை | 285 | 50,197.00 |
| 13 | சென். மேரி வித்தியாலயம் கேகாலை | 550 | 82,879.00 |
| 14 | பதுளை மாவட்டச் செயலகம் | 300 | 94,137.00 |

| | | |
|---|---|---|
| **முழு எண்ணிக்கை** | **5931** | **1,072,770.00** |

**<u>மொழி பெயர்ப்பு டிப்ளோமா பாடநெறி</u>**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ் மொழி மற்றும் உரை பெயர்ப்பாளர்களைப் பயிற்றுவிப்பது இந்நிறுவனத்தின் பிரதான ஒரு நோக்காகும்.

இதனடிப்படையில் 2019.05.26 ஆம் திகதி மாக்கும்புரையில் அமைந்துள்ள பிரதான காரியாலயத்தில் இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதோடு இதில் 44 மாணவர்கள் பங்குகொண்டனர். இதன் பொருட்டு ஒருவரிடமிருந்து பாடநெறிக் கட்டணமாக ரூபா 40,000.00 அறவிடப்பட்டது.

**<u>இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பான ஆசிரியர் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி</u>**

இரண்டாம் மொழிக் கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் பத்திரப் பாடநெறியினைப் பின்பற்றிய மாணவர்களின் பொருட்டு இப்பாடநெறி ஒழுங்கு செய்யப்பட்டது. இதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு இப்பாடநெறிக்காக 47 மாணவர்கள் பதிவு செய்ததோடு, ஒருவரிடமிருந்து பாடநெறிக் கட்டணமாக ரூபா. 20,000.00 அறவிடப்பட்டது.

**பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட மொழிப் பயிற்சிப் பாடநெறிகள்**

மொழி கற்பித்தலை இலகுபடுத்தும் நோக்குடன் மற்றும் முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் தனியார் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டு அத்தகைய நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட மொழிப் பயிற்சிப் பாடநெறிகள் வருமாறு

| தொடர். இல | பாடநெறி | பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் |
|---|---|---|---|
| 1 | 50 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறி | 14 | 802 |
| 2 | 100 மணித்தியால மொழிப் பயிற்சிப் பாடநெறி | 50 | 3273 |
| | **முழு எண்ணிக்கை** | **64** | **4075** |

## 7.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### அறிமுகம்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் சரியான முறையில் இடம்பெறுகின்றனவா என்பதனைக் கண்காணிக்கும் அதேவேளை, குறிப்பிட்ட நடவடிக்கைக்குப் பொறுப்பானவர்களின் ஆலோசனைகளிலிருந்தும், செயற்பாட்டுத் திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவோரிலிருந்தும் தனியாக, சுயாதீனமாக இயங்கும் ஓர் அலகாகும்.

நிதி மற்றும் கணக்கீடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வானது நேரடியாக நிறுவனத் தலைவருக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது அத்தியவசியமாகும்.

உள்ளகக் கணக்காய்வு அலகின் கருத்திட்டம் மற்றும் யோசனைகள் தொடர்பாக கணக்காய்வு நடவடிக்கைகளுக்குரிய விடயங்களை அளவீட்டுக்கு உட்படுத்துவதற்கான உள்ளகக் கணக்காய்வு வேலைத் திட்டங்களை முறைப்படுத்தி அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சேவைகளும் பொறுப்புகளும்

- தவறுகளையும் ஊழல்களையும் தடை செய்வதற்காக நிறுவனத்தினுள்ளே செயற்படும் உள்ளகக் கணக்காய்வுச் சோதனைகள் மற்றும் திட்டங்கள் மூலம் இடம்பெறும் செயற்பாடுகள் எவ்வளவு தூரம் சிறப்பானது என்பதைத் தேடிப் பார்த்தல்
- கணக்கு மற்றும் ஏனைய அறிக்கைகளின் நம்பிக்கையை உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படும் கணக்கியல் மூலம் சரியான கணக்குக் கூற்றுக்களை ஒழுங்கு செய்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா எனத் தேடிப் பார்த்தல்
- அலுவலர் குழாத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் போது அவர்களின் செயலாற்றுகையின் தன்மையினை மதிப்பிடுதல்.
- நிறுவனத்தின் சொத்துக்கள் அனைத்தும் நட்டம் மற்றும் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பதைத் தேடிப் பார்த்தல்

- அரசாங்கத்தின் தாபனவிதிக்கோவை, அரசின் நிதியியல் ஒழுங்கு, மற்றும் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற நிறுவனத்திற்குரிய சுற்றறிக்கைகள் என்பவற்றின் ஆலோசனைகள் பின்பற்றப்படுகின்றனவா எனத் தேடிப்பார்த்தல்.
- விரயம், செயலற்ற போக்கு மற்றும் அதிகரித்துச் செல்லும் செலவு என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் அவற்றை அடையாளம் கண்டுகொள்வதற்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உள்ளக நிர்வாக முறையின் வெற்றித் தன்மையினைத் தேடிப் பார்த்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட புலனாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- கணக்கீட்டுப் பார்வைக் கோணத்திலின்றி முகாமைத்துவக் கோணத்தில் நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பரிசோதனை செய்தலும் அது தொடர்பில் தேடிப்பார்த்தலும்.
- வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்களின் முன்னேற்றம் அது தொடர்பான கால அமைவு என்பன எவ்வளவு தூரம் நிறுவனத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு பொருத்தமாக உள்ளன என்பதைத் தேடிப்பார்த்தல்.

**உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்**

நிறுவனத்தின் வருடாந்த செயற்திட்டத்திற்கு அமைவாகவும் பிரதான வேலைத் திட்டங்கள் மற்றும் ஏனைய திட்டங்களுக்கு அமைவாகவும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டங்களை வகுத்துக் கொள்ளும்.

**உள்ளகக் கணக்காய்வு வேலைத் திட்டங்கள்**

நிறுவனத்தின் நிதியியல் நடிவடிக்கைகள் முறையாக நடைபெறுகின்றனவா, அவை போதுமானவையாகக் காணப்படுகின்றனவா, வினைத்திறன் மிக்கதாகக் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் பரீட்சிப்பதற்கு, நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் செயற்படுகின்ற பிரிவுகளோடு இணைந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படும்.

**உள்ளகக் கணக்காய்வு அறிக்கையினைச் சமர்ப்பித்தல்**

உள்ளகக் கணக்காய்வு அறிக்கை நிறுவனத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும். அவ்வறிக்கையின் பிரதியானது நிரல் அமைச்சுக்கும் அரச கணக்காய்வுத் திணைக்களத்துக்கும் மற்றும் நிதி அமைச்சினது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்படும். இந்த அறிக்கயைில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினது கூட்டத்தின்போது கலந்துரையாடப்படும்.

**2019 ஆம் ஆண்டு உள்ளகக் கணக்காய்வு செயற்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட துறைகள்**

- பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான கணக்காய்வுகள்
- திட்ட அமர்வுகள் தொடர்பான கணக்காய்வு
- நிலையான சொத்துக்களைப் பேணுதல் மற்றும் ஏனைய கொள்முதல் தொடர்பான நடவடிக்கைகள்
- பணிக்குழாத்தினரின் பொருட்டு நடாத்தப்பட்ட இயலுமை விருத்திச் செயற்பாடுகள்
- சுய வருமான வேலைத் திட்டங்கள்
- மீண்டெழும் செலவுகள்
- காரியாலய ஊழியர்களின் விடுமுறை
- செலவுகள் தொடர்பான முன்னைய கணக்காய்வு
- விசேட விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல்
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

**இடர் முகாமைத்துவம்**

**நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான அறிமுகம்**

எல்லா நிறுவனங்களும் பல்வேறு இடர்களுக்கு முகம்கொடுத்த வண்ணம் உள்ளன. இத்தகைய இடர்கள் முகாமை செய்யப்பட வேண்டிய அதேவேளை, இவை முறையாக முகாமை செய்யப்படின், அது தொடர்பில் ஓர் உயரிய இயல்திறன் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும்.

இத்தகைய இடர்களை, பிரதான நோக்குகள் மற்றும் நிதி இடர்பாடுகள் என்னும் அடிப்படையில் வகைப்படுத்தலாம். இத்தகைய இடர் வகைப்படுத்தல்களின் சுருக்கம், ஒவ்வொரு வகைப்படுத்தல்களின் கீழும் காணப்படும் விசேட இடர் செயற்பாடுகள் மற்றும் இத்தகைய இடர்களைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்பன பின்வரும் அட்டவணையிலே காட்டப்பட்டுள்ளன:

| | இடர்க் காரணி | பெறுபேறு | இடரினை மதிப்பீடு செய்தல் |
|---|---|---|---|
| 1 | பரீட்சை நியமங்களை பூர்த்தி செய்வதற்குக் தவறுதல் | மாணவர் பரீட்சை முன்னேற்ற அறிக்கை பொருந்தாதிருத்தல் | பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்பார்வை செய்தல் |
| 2 | போலியான மனித வள முகாமையின் அறிமுகம் | கற்பித்தல் நடவடிக்கைகளின் செயற்திறன்கள் குறைவடைதல் | வளவாளர்களின் தகைமைகளை மீள்பரிசோதனை செய்தல் |
| 3 | நிதி இடர்ப்பாடுகள் | மோசமான நிதி முகாமைத்துவம் மற்றும் உள்ளக நிர்வாகத்தின் மூலம் நிதிப் பொறுப்புகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் நிதி இலக்குகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் இயலாமை.<br>ஊழல், மோசடிகள், மேலதிக செலவுகள் என்பன அதிகரித்தல் | வருமான மார்க்கங்களை ஏற்படுத்துதல், வரவு செலவுகளைப் பராமரித்தல், செயற்பாட்டு மீளாய்வு |
| 4 | தகவல் முறையாக சேகரிக்கப்படாமை | தகவல் முறைமைகளுக்கு இடையூறு ஏற்படல், சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குவதற்கு முடியாமை, உதவிச் சேவைகளுக்கு இடையூறு ஏற்படல் | தகவல் முறைமைகளின் நிகழ்கால, எதிர்கால தேவைகள் குறித்து தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் |
| 5 | நிர்வாக நடவடிக்கைகள் முறையாகப் பேணப்படாமை | வாகனங்களைக் கையாளுதல், சேவைக் குழாமினரின் விடுமுறை, கட்டட நிர்மாண நடவடிக்கைகள், கொள்முதல் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு இடையூறு ஏற்படல் | குறித்த விடயம் தொடர்பில் மேற்பார்வை செய்து பரிந்துரையுடன் கூடிய அறிக்கையைச் சமர்ப்பித்தல் |

**உள்ளக நிர்வாகம்**

நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுத் தொகுதியின் செயற்திறனை உள்ளகக் கணக்காய்வின் மூலமும் வெளிவாரிக் கணக்காய்வின் மூலமும் வழங்கப்படும் அறிக்கை மூலம் மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்




**குணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை**

அரச வியாபார சுற்றுநிருப இலக்கம் 55 (ீநுனு 55) இற்கு ஏற்ப காலாண்டிற்கு ஒரு கூட்டம் என்னும் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் 4 நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7.8 **கணக்கியல் பிரிவு**

